2014 ஜூலை 30]

தொடர்ந்திருப்பதால், அந்தப் பணிகள் நடைபெறாமல் இருக்கின்றன என்று தெரிவிக்கப்பட்டது. எனவே, அந்தப் பணிகளைச் செய்து, உடனடியாக வகுப்பறைகளைக் கட்டுவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூகரெங்கபுரம் மேல்நிலைப் பள்ளி, கூடங்குளம் மற்றும் செட்டிகுளம் ஆகிய பகுதிகளில் இருக்கக்கூடிய பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்ட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். இதுகுறித்து ஆய்வு செய்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, பழவூர் பள்ளியில் நபார்டு வங்கித் திட்டத்தின்மூலம் கட்டப்பட்ட கட்டடப் பணிகள் நிலுவையில் உள்ளன என்ற கருத்தைத் தெரிவித்திருக்கின்றார். அந்தப் பணிகளையும் ஆய்வு செய்து, அங்கு கட்டடங்கள் கட்டி முடிக்கப்படாமல் நிலுவையில் இருந்தால், உடனடியாக அந்தக் கட்டடங்களைக் கட்டித் தருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 283, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

283—

மலைவாழ் மக்களுக்கு வீடு கட்டுதல்

***27709—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அந்தியூர் தொகுதி, தொட்டகோம்பையிலுள்ள மலைவாழ் மக்களுக்கு வனத் துறையின் மூலமாக வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்கி, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) அந்தியூர் தொகுதி, தொட்டகோம்பையிலுள்ள மலைவாழ் மக்களுக்கு வீடுகள் கட்ட சம்பந்தப்பட்ட துறையின் அனுமதி பெற்று, தேவையான நிதியை வனத் துறைக்கு ஒதுக்கும்பட்சத்தில், வனச் சட்டங்கள் மற்றும் விதிகளின்படி ஆய்வு செய்து வீடுகள் கட்டும் பணிகளை மேற்கொள்ள ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.*

திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருமறை கண்ட வேதியின் அறிவும், பின்வரும் காலத்தை அறியும் வள்ளுவர் அறிவும், எதிரிலே இருப்பவர் சிந்தையை அறியும் ஞானியின் அறிவும், கோள்களின் இயக்கத்தைக் கணித்துக் கூறும் ஜோதிடர் அறிவும், சோதனைக் காலத்தையும் வெற்றிக் காலமாக மாற்றும் வியத்தகு அறிவும் (மேசையைத் தட்டும் ஒலி) வேண்டுவோர் மனதை ஊடுருவி அறியும் வள்ளலின் அறிவும் ஒருங்கே பெற்று, ஏற்றமிகு தமிழகத்தை இந்தியாவிற்கே வழிகாட்டியாக உருவாக்கியிருக்கும் எங்கள் தாய், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், அந்தியூர் சட்டமன்றத் தொகுதியில் தொட்டகோம்பை என்னும் மலை கிராமம் உள்ளது. இப்பகுதியில் 85 குடும்பங்களைச் சார்ந்த சுமார் 300 மலைவாழ் மக்கள் வசிக்கின்றனர். இவர்கள்

2014 ஜூலை 30]

ஆடுகள் மேய்த்தும், வனத்தில் விளையும் பொருட்களைச் சேகரித்தும் தங்கள் வாழ்க்கையை நடத்திவருகின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய திட்டத்தின்கீழ் விலையில்லா ஆடுகள் மற்றும் கிரைண்டர், மிக்சி, மின் விசிறி போன்ற அனைத்துப் பொருட்களும் இங்குள்ள அனைத்துக் குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டிருக்கின்றன. மேலும், இங்கு ஓர் அரசுப் பள்ளி இருக்கிறது. அதில் 2 ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இந்தப் பள்ளியில் 50 குழந்தைகள் படிக்கின்றனர். இவர்கள் வசிப்பதற்கு போதிய வீடுகள் இல்லாத காரணத்தினால், இவர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட பொருட்களைக்கூட பயன்படுத்த முடியாத சூழ்நிலை உள்ளது. மாண்புமிகு பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியில் 35 குடும்பங்களுக்கு ஓடுகள் வேய்ந்த வீடுகள் கட்டித் தரப்பட்டன. அந்த வீடுகள் அனைத்தும் தற்போது பழுதடைந்த நிலையில் உள்ளன. இந்த நிலையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, இந்தப் பகுதியிலுள்ள மக்களுக்கு வீடுகள் கட்டித் தரப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இதற்கு தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 284, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ராமமூர்த்தி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

284—

காலிப் பணியிடங்கள்

***34516—திரு. ஆர். ராமமூர்த்தி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலுள்ள மருத்துவர், செவிலியர் மற்றும் துப்புரவுப் பணியாளர்கள் காலிப் பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?